**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**பழனி**
**முன்னிலை : திரு.இரா. கார்த்திகேயன்,பி.ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண்.16/2024**
**இன்**
**அ.வ.எண்.88/2019**

1. A. முகம்மது யூசுப்
2. A. சேட்டு முபாரக் ….. வாதிகள்

/எதிர்/

1. கருப்புச்சாமி
2. சண்முகசுந்தரம்
3. நிர்வாக அதிகாரி அவர்கள்,
   பாலசமுத்திரம் பேரூராட்சி.
4. வட்டாட்சியர் அவர்கள், பழனி.
5. மாவட்ட ஆட்சியர் அவர்கள், திண்டுக்கல்.

…… எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அன்வர்தீன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஹரிஹரன் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும்,

ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்குரையை இம்மனுவில் கூறியுள்ள விபரப்படி திருத்தம் செய்துகொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுச் சுருக்கம்:–**

I) மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கின் சொத்து விபரத்தில் சொல்லப்பட்ட சொத்தின் சர்வே எண்.829/9 ஆகும். அதன் அருகில் உள்ள சர்வே எண்கள்.829/10, 829/11, 829/12, 859/58 ஆகியவை பிரச்சனைக்குரிய சர்வே எண்கள் ஆகும். தாவா பிரச்சனைக்குரிய சர்வே எண்.829/10 என்பது பொது வீதியாகும். 1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் கடந்த சில மாதங்களாக அந்த பொது வீதியை ஆக்கிரமிப்பு செய்து இரும்பு கேட் அமைத்துள்ளதால் அந்த சர்வே எண்.829/10 ஐ அடுத்து அதன் தொடர்புடைய பொது வீதியான சர்வே எண்.829/12, 829/55 ஆகிய வீதிகளை மனுதாரர்களும், பொதுமக்களும் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. மேலும் சர்வே எண்.829/12, 829/55 ஆகிய வீதி பகுதிகளை அதன் அருகில் உள்ள மக்கள் தங்களது சொத்துக்களுடன் சேர்த்து மேற்படி பொது வீதியை மறித்து சிறு சிறு கட்டிடங்கள் கட்டி பாதை பகுதியை தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

ii) மனுதாரர்கள் வீட்டில் இருந்து பாலசமுத்திரம் கடை வீதியை அடைய சர்வே எண்.829/12, 829/55 எண்களில் உள்ள பாதை பயன்படுத்தப்பட்டது. மனுதாரர்களின் வீட்டு வாசலில் ஆரம்பிக்கும் சர்வே எண்.829/10–ன் வீதி தடைப்பட்டிருப்பதால், அதனை தொடர்ந்து வருகின்ற சர்வே எண்.829/12, 829/55 ஆகிய வீதிகளும் தடைபட்டு விட்டது. ஆகவே அது குறித்து பரிகாரங்கள் கோர மனுவில் சொன்ன திருத்தங்களை அசல் வழக்கில் ஏற்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்பதே மனுச்சுருக்கம் ஆகும்.

**<u>2) 1, 2 எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைச் சுருக்கம்:–</u>**

I) மனுதாரர்கள் சர்வே எண்.829/12, 829/55 ஆகிய வீதிகளை அருகில் உள்ள மக்கள் தங்கள் சொத்துக்களுடன் சேர்த்து கட்டிடங்கள் கட்டி விட்டதாக கூறியிருப்பது உண்மையல்ல. சர்வே எண்.829/12, 829/55 ஆகிய வீதிகளை அதன் அருகில் உள்ள மக்கள் யார் யார் எவ்வளவு சதுரடி அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது பற்றியோ, ஆக்கிரமிப்பாளர்கள் பெயர்கள் பற்றியோ மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. சர்வே எண்.829/12, 829/55 பொது வீதி என கூறியுள்ளதிலிருந்து அவை பாலசமுத்திரம் பேரூராட்சிக்கு பாத்தியப்பட்டது என தெரிய வருகிறது. அவ்வாறு பேரூராட்சிக்கு உரிமைப்பட்ட சர்வே எண்களை அசல் வழக்கில் சேர்த்து பரிகாரம் பெற மனுதாரர்களுக்கு உரிமை இல்லை.

ii) மனுதாரர்கள் தங்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.829/9–ல்

உள்ள சொத்தை பொறுத்து மட்டும் வழக்கு தாக்கல் செய்து விட்டு, தற்சமயம் பாலசமுத்திரம் பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்கள்.829/12, 829/55 ஆகிய இடங்களை பொறுத்து பரிகாரம் பெற அசல் வழக்கை திருத்தம் செய்ய கேட்டிருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அசல் வழக்கு தள்ளுபடி ஆகி விடும் என்ற அச்சத்தால் அதன் விசாரணையை தாமதப்படுத்தும் நோக்கில் இது போன்ற மனுக்களை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார். ஆகவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்பதே எதிருரை சுருக்கம் ஆகும்.

3) 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகி இருந்த கற்றறிந்த வழக்கறிஞர் மனுச்சங்கதிகளை வலியுறுத்தி மனுவை அனுமதிக்க வேண்டும் என வாதிட்டார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகி இருந்த கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரைச் சங்கதிகளை வலியுறுத்தி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

5) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

6) **தீர்வு:**

I) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

ii) மனுதாரர்கள் அசல் வழக்கில் சர்வே எண்.829/10-ல் பொதுப்பாதை

ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறி, அதன் பேரில் பரிகாரம் கோரியுள்ளனர். அவ்வாறு அசல் வழக்கு நிலுவையில் உள்ள போது சர்வே எண்.829/10–ஐ அடுத்து அமைந்துள்ள சர்வே எண்.829/12, 829/55 ஆகிய வீதிகளில் அருகில் வசித்து வரும் மக்கள் அந்த பாதைகளை ஆக்கிரமித்து சிறு சிறு கட்டிடங்கள் கட்டி பாதை தடுத்து விட்டதாக மனுவில் கூறி, அதன் பேரில் பரிகாரம் பெற அசல் வழக்கை திருத்த அனுமதி கோரியுள்ளனர். அசல் வழக்கில் கடந்த 11.12.2020ம்தேதி எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 24.03.2023ம் தேதி வாதிகள் தரப்பு சாட்சி துவங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் பேரில் கிராம நிர்வாக அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, கடந்த 12.09.2023ம் தேதி அவர் வாதிகள் தரப்பு சாட்சி இரண்டாக சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் மீண்டும் வாதிகள் தரப்பு சாட்சி வா.சா.1ஐ குறுக்கு விசாரணைக்காக அழைக்க பிரதிவாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டு வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இருந்த போது இம்மனு மனுதாரர்கள் / வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Iii) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு அசல் வழக்குரையை பரிசீலனை செய்யும்போது அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.829/9–ல் அமைந்துள்ள சொத்திற்கு சர்வே எண்.829/10–ல் பொது பாதை உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர் என அறிய முடிகிறது. மேற்படி சர்வே எண்.829/10–ஐ தொடர்ந்து சர்வே எண்.829/12, 829/55–ல் பொது பாதை உள்ளதாகவும், அதனை வாதிகள் பயன்படுத்துவதாகவும் வழக்குரையில் எந்த இடத்திலும் மனுதாரர்கள் / வாதிகள் கூறியிருக்கவில்லை. வழக்குரை சொத்து

விபரத்திலும் அவ்வாறு சர்வே எண்.829/9–ல் உள்ள அவர்கள் சொத்திற்கு சர்வே எண்.829/12, 829/55–ல் பாதை உள்ளதாக குறிப்பிடவில்லை. மேலும் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் வா.சா.ஆ.1–லும் மனுதாரர்கள் / வாதிகளின் சொத்திற்கு சர்வே எண்.829/12, 829/55 வழி சர்வே எண்.829/10–ஐ தொடர்ந்து இருப்பதாக குறிப்பிடவில்லை. மேலும் இந்த மனுவிலும் மனுதாரர்கள் / வாதிகள் சர்வே எண்.829/12, சர்வே எண்.829/55 ஆகியவை வாதிகளுக்கு உரிமை உள்ள பொது பாதை என காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை.

iv) ஆகவே மனுதாரர்கள்/வாதிகள் சொன்ன சர்வே எண்.829/12, 829/55 ஆகிய சர்வே எண்கள் வழியாக பாதை உள்ளது என்பதை மனுதாரர்கள்/ வாதிகள் முதல் நோக்கில் நிரூபிக்கவில்லை. மேலும் சர்வே எண்.829/12, 829/55 ஆகியவற்றில் யார், யார் எப்பொழுது, எவ்வளவு விஸ்தீரணங்கள் அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று மனுதாரர்கள் / வாதிகள் மனுவில் குறிப்பிடவில்லை. மேற்படி ஆக்கிரமித்ததாக சொல்லும் நபர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனுதாரர்கள் / வாதிகள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மனுவில் சொன்ன சர்வே எண்.829/12, 829/55 ஆகியவை நிலுவையில் உள்ள அசல் வழக்கு பிரச்சனைக்கு நேரடியாக சம்மந்தப்படாத சர்வே எண்கள் என தெரிய வருகின்றது. இந்நிலையில் வழக்கு விசாரணை தொடங்கி மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் / வாதிகள் கூடுதலாக இரு சர்வே எண்களை குறிப்பிட்டு அதனை வழக்கில் தரப்பினராக அல்லாத

வேறு சிலர் ஆக்கிரமித்துள்ளதாக கூறி அந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டி அசல் வழக்கில் பரிகாரம் கோரி திருத்த அனுமதி கேட்டு தாக்கல் செய்துள்ள இம்மனு நிலுவையில் உள்ள அசல் வழக்கின் தன்மையை முற்றிலும் மாறுபடுத்தக்கூடியதாக உள்ளது என்றும், அதனால் அசல் வழக்கு விசாரணை தாமதப்படும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

v) ஆகவே வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பிறகு மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், மனுவில் கோரிய பரிகாரங்கள் மனுதாரர்கள் / வாதிகளுக்கு வழங்க இயலாது என்றும், மனுதாரர்கள்/ வாதிகள் கோரியவாறு அசல் வழக்கை திருத்த அனுமதிக்க இயலாது என்றும், அதன்படி இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக மனுதாரர்கள் / வாதிகள் மனு தள்ளுபடி செய்யப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R.KARTHIKEYAN Digitally signed by R.KARTHIKEYAN Date: 2024.09.05 18:48:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

05.09.2024

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

R.KARTHIKEYAN Digitally signed by R.KARTHIKEYAN
Date: 2024.09.05 18:48:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
பழனி.

05.09.2024